பக்கங்கள் 8

புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 1-2-80
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The EELANAADU
50 சதம்
மலர் 21 தை 12 ரபி-அவ் 7 இதழ் 348
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-1-80

தரத்தில் நிகரற்ற
மான், முயல்,
விளக்கு, வரிக்குதிரை
செவனமார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-1-28
PERIODICALS DIVISION
LIBRARY * CAMPUS

### அமைச்சர் இராசுவுக்கு 'அமிர்' கடிதம்

# எம். பி. பதவியை விட்டு விலகும்படி வற்புறுத்து

## ஊழல் பற்றிய பத்திரங்கள் ஜனுதிபதிக்கு அனுப்பப்படும்

(கொழும்பு)

**தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்புரிமையிலிருந்து மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செ. இராசதுரை விலக்கப்பட்டுவிட்டார்.**

இதுதொடர்பான கடிதமொன்றை தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. இராசதுரைக்கு நேற்று அனுப்பிவைத்தார்.

திரு.இராசதுரைக்குஎதிரான பான விசாரணை நடத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர் கொழும்பு நடவடிக்கைக் குழுவின் தீர்ப்பிற்கமைய கட்சிக்கெதிராக செயல்பட்டமைக்காகவும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியமைக்காகவும் அவர் கட்சியில் உறுப்புரிமையிலிருந்து 12-1-1980ம் திகதி தொடக்கம் நீக்கப்படுவதாகவும் 5-1-1980 அன்று கூடிய மத்திய செயற்குழு தீர்மானத்தின்படி 12-1-1980 முதல் அவர் கட்சியின் உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

1977ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட தமிழர்விடுதலைக்கூட்டணியின் வேட்பாளராக நியமனம் பெற்றபோது கட்சிக்குஅளித்த வாக்குறுதியின்படி பாராளுமன்ற உறுப்புரிமையை உடனே ராஜினுமாசெய்யும்படியும் திரு. ராசதுரையை த. வி. கூட்டணி செயலாளர் நாயகம் வற்புறுத்தியுள்ளார்.

### ஊழல் குற்றச்சாட்டு

திரு. இராசதுரைக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஊழல்சம்பந்தமான பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய சத்தியபத்திரங்கள் விசாரணை நடத்தி மேல்நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு ஜனுதிபதிக்கு அனுப்பிவைக்கும்படி தாம் மத்தியசெயற்குழுவினுல் கேட்கப்பட்டிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (ம)

## மறைந்த மீனவரின் படகு எரிந்த நிலையில் மீட்பு

### கடலுக்கடியில் கிடந்தது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு இளைஞர்களும் அவர்கள் சென்ற படகும் காணுமல் போனதைத் தொடர்ந்து நடத்திய தேடுதல் வேட்டையில் படகு எரிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் கடலின் அடியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீன் பிடிக்கச்சென்ற சினிவாச

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபை கூட்டத்தில் 'ஈழநாடு' செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில், நேற்று உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை 'ஈழநாடு' பத்திரிகை முன் பக்கச் செய்தியை வாசித்துக் காட்டினர்.

'ரெண்டர் முறையில் மாற்றமில்லை' யென்றும் அமிர் யோகேஸ் கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டதாகவும் இதனை மக்களுக்கு தெரியப்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறினர்.

இதுசம்பந்தமாக கடந்த கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாக நகரமுதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் கூறினர்.

'ஈழநாடு' பத்திரிகையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| அ. வரதராஜப்பெருமாள் | வே. மேரி அங்கயற்கண்ணி |

28-1-1980 திங்கள் காலை 10-00 மணி

இடம், யாழ் வீரசிங்கம் மண்டபம்

திருமணம் நிறைவேற்றல்: திரு. கா. இந்திரபாலா அவர்கள்
திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்

அழைப்பு: நண்பர்களையும் உறவினர்களையும் சுற்றம் சூழச் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புரிமை தழுவி அழைக்கிருேம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்காதோர் இவ்வழைப்பினை ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| திருமதி அ. கன்னிவேலம்மாள் | அ. வேதநாயகம் |
| சு. கந்தசாமி தம்பதிகள் | தம்பதிகள் |
| 66/14, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம். யாழ்ப்பாணம், | 36 ஏ. கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் |

4800

வெளிநாட்டு சூத்திர முறைகளினுல் ................ தயாரிக்கப்பட்டவை

றொபின் சோப்வகைகள்




வெண்மைக்கு வெண்மை தருபவை




தயாரிப்பாளர்:
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9, கண்டி வீதி, நாவற்குழி

## கச்சதீவு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 6ம் திகதி முதல் 9ம் திகதிவரை நடைபெறும்.

கச்சதீவு யாத்திரிகர்களின் வசதிக்காக, இம்முறை, யாழ் மாவட்ட கலாச்சார பகுதி பல நல்ல திட்டங்களை வகுத்து செயல்படவுள்ளது.

முதல் நடவடிக்கையாக அடுத்த மாத நடுப்பகுதியில் கச்சதீவு ... கலாச்சாரப்பகுதி உயர் அதிகாரிகள் ... அங்கு சென்று நீர்த்தாங்கங்களை அமைக்கவுள்ளது. (செ)

யே. ம. சு, துணை

## திருமண அழைப்பு

நிகழும் 1980-ம் ஆண்டு தை மாதம் 28-ம் திகதி [28-1-80] திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரி | சுன்னுகம் யோ. வின்சன்ற் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் |
| எலிசபெத் ஞானேஸ்வரி | வில்லியம் மரியதாஸ் |
| அவர்களுக்கும் | (வீடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் |

மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்ற நிச்சயித்திருப்பதால்அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும், 31-1-80 வியாழன் மாலை 3 மணி தொடக்கம் 8 மணிவரை எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்ருேம்.

தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்காத அன்பர்கள் இவ்வழைப்பை அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
வைத்தியகலாநிதி ஜி. ஜோர்ஜ்ஜும்
(சமாதான நீதவான்)
மனைவி ஞானமலரும்

''மரிய வாசம்''
சுன்னுகம்

4774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

28-1-80-ம் திகதி நடைபெற விருக்கும் தம்பலகாமம் ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகத்தின்போது அங்கு மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை நடைபெறும். அத்துடன் சிவன், பார்வதி படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்பவர்கள் ஒப்படைத்து சிறந்த பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், த. பெ. இல:77, யாழ்ப்பாணம். 4732

ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. ஐங்கரன் ஸ்ரோர்ஸ், 14, பஸ் நிலையம் முன்னால், யாழ்ப்பாணம். 4755

நல்ல பதினொரு வேப்பமரங்கள் விற்பனைக்குண்டு. 7-2-80 வரை நேரில் பார்வையிடலாம். இயக்கச்சி சந்தியிலிருந்து கோயில்வயல் றோட்டில் 2ஆம் மைல் கல்லடியிலுள்ள கணேச தோட்டம், இயக்கச்சி. 4794

### பஸ் சாரதிகள் தேவை

பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு பஸ் ஓட்டுவதற்கு ஆகக்குறைந்தது ஏழு வருட அனுபவமுள்ள பஸ் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர்கள் நல்லதேகஆரோக்கியம் உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ஆகக்குறைந்தது கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 45 வயதுக்கு உட்பட்டவர்களாயிருத்தல்வேண்டும். ஒருகிழமைக்குள் சான்றுப்பத்திரங்களுடனும், அண்மையில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

த. பெ. எண்: 932,
4766 கொழும்பு.

## வேலணை ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

(தற்காலிகம்)

மேற்படி சங்கத்தில் லொறிக் கிளினர், காவலாளி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமை:**
8-ம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.

**வயதெல்லை:**
23 - 30 வரை.

**வேதனம்:**
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டப்படி வழங்கப்படும்.

பிணைப்பணம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சங்கத்தினால் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்ற ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதி 08-02-80.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் ''பொதுமுகாமையாளர், வேலணை ப. நோ. கூ. சங்கம், வேலணை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறிக் கிளினர், காவலாளி பதவியின் பொருட்டு விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு 08-02-80-ம் திகதிக்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
4596

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் சித்தார்த்தி ஆண்டு தைத் திங்கள் 14-ம் நாள் (28-1-1980) திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி முதல் 3-30 மணி வரையுமுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எனது புத்திரி |
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| வைத்திய கலாநிதி | **சுதிராகமணி** |
| **சண்முகராசா** | அவர்களுக்கும் |
| (ராஜா வைத்திய நிலையம் கந்தர்மடம்) | |
| அவர்களுக்கும் | |

கீரிமலைச் சிவன் கோவிலில் நடைபெறும் திருமண விழாவிற்கு தாங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு:**
மணமகன் இல்லம் 29-1-1980 பிற்பகல் 4 மணி.
மணமகள் இல்லம் 30-1-1980 பிற்பகல் 4 மணி.

தங்கள் நல்வரவை நாடும்

வைத்தியக் கலாநிதி
**பொ. செ. துரையப்பாவும், பாரியாரும்.**
42, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**திருமதி த. கந்தையா**
''லிங்கவாசா''
இளவாலை.

4726

## மடத்துக்கரை முத்துமாரி அம்பாள்

கட்டட நிதிக்காக இன்னும் பணம் உதவவேண்டியவர்கள் திருப்பணிச்சபைத் தனாதிகாரியிடம் 2-2-80க்கு முன்னர் கொடுக்கும்படி தயவாகவேண்டுகிறேன். திருப்பணிச்சபையின் சார்பில் வேறுயாரும் பணம் பெறவரின் திருப்பணிச்சபை தனாதிகாரியின் பற்றுச்சீட்டின்றிபணம் கொடுக்க வேண்டாம் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். திருப்பணிச்சபையின் வரவுசெலவு கணக்கு அறிக்கை கூடிய விரைவில் வெளிவரும்.

**ஆ. நல்லதம்பி,**
தனாதிகாரி,
கட்டட திருப்பணிச்சபை.

மடத்துக்கரை,
முத்துமாரி அம்பாள் ஆலயம்,
காரைநகர்.
23-1-80 4789

## அறிவித்தல்

சிங்கப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு வர்த்தக ஸ்தாபனம் தனது கிளைகளை யப்பான், கொறியா, தாய்லாந்து, கொங்கொங், தைவான் நாடுகளில் ஸ்தாபித்துள்ளது. இந்த ஸ்தாபனம் இலங்கையில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டு அவற்றிற்குத் தேவையான வெளிநாட்டுப் பொருட்களை மிக மலிவாகப் பெற்றுத்தருவதற்கு முன்வந்துள்ளது.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்.

**அமரனுத் என்ரப்பிறைஸ்,**
30, ரோஸ்மேட் பிளேஸ், கொழும்பு-7.
தொலைபேசி: 92788.

அல்லது

**அமரனுத் எக்ஸ்போட் லிமிட்டெட்,**
தபால்பெட்டி: 152,
சிங்கப்பூர்-0617.

4725

## மரண அறிவித்தல்

### திருமதி செ. விசாலாட்சி

புலோலி தெற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த காலம் சென்ற சரவணமுத்து செல்வராசா (இளைப்பாறிய சிரேட்ட களஞ்சிய அதிகாரி கல்லோயா சபை) வின் அன்பு மனைவி திருமதி செ. விசாலாட்சி காலமானார். இவர் காலம் சென்ற செல்வரத்தினம், யோகரத்தினம், இராசேஸ்வரி, கணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சு. இராசரெத்தினம் (சங்கானை உதவி அரசாங்க அலுவலகம்), எம்.எஸ் சுந்தரலிங்கம் (சட்டத்தரணி, யாழ்ப்பாணம்), தங்கா ஆகியோரின் மாமியும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் குடும்ப மயானத்திற்கு அவரது மகன் யோகரெத்தினத்தின் கொடிகாமம் [illegible] இன்று சனிக்கிழமை 26ம் திகதி காலை 8-30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். 4791

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கு

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலியில் ஏறத்தாழ எண்ணாயிரம் (8000) வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. அவற்றைப்பெற விரும்புவோர் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக நூறு ரூபா (100)வும். விண்ணப்பப் படிவத்திற்கு ஐந்து(5)ரூபாவும மொத்தம் நூற்றி ஐந்து ரூபாவும் மேற்கூறப்பட்ட காரியாலயத்தில் 02-02-80ந் திகதி சனிக்கிழமைக்கு முன் சட்டி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை 06-02-80 புதன்கிழமைக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம் என்று எழுதுதல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
வலி- கிழக்கு வட பகுதி
பலநோக்கக் கூட்டுறவுச்
சங்கம்,
அச்சுவேலி.

4797

வ. முத்துக்குமாரசுவாமி,
சட்டத்தரணி,
29, முன்தெரு,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோப்பாய் தெற்கு தருமலிங்கம் கைம்பெண் நாகேஸ்வரி என்பவரி [illegible] மில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்
சுப்பிரமணியம் தருமலிங்கம் இங்குறுகம தோட்டம், பதுளை.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3445

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980ஆம் ஆண்டு மாசி மாதம் 1-ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்,
யாழ். மாவட்ட நீதிமன்றம்.
1979ஆம்ஆண்டு கார்த்திகை மாதம் 29ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
4770

## நெடுங்கேணி பாவனையாளர் சங்கம்

(புளியங்குளம்)

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான பாவனையாளர் சங்கத்தை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

தலைவர்: க. தனபாலசிங்கம், செயலாளர்: சு. யோகநாதன், பொருளாளர்: எஸ். நித்தியானந்தம். பத்து உறுப்பினர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (கு)

## இன்று நடைபெறும் அந்தியேட்டி



நல்லசேகரம் பிள்ளை
சிவசுப்பிரமணியம்

தோற்றம் 8-9-1908
மறைவு 27-12-1979

வல்லவர் இவர் யாவருக்கும் நல்லவர்
இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

--வழக்கம்பரை சன சமூக பஜனைச்சபையார்.

## அந்தியேட்டி அழைப்பு

27-12-1979-ல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் திரு. ந. சிவசுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 26-1-80 சனிக்கிழமை வழக்கம்பரையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் மனைவி சிவபாக்கியம், மைத்துனர் மு. மயில்வாகனம். மக்கள் சி. சிவலோகநாதன், சி. ராஜலட்சுமி, சி. விக்னேஸ்வரராஜா, மருமக்கள் சரோஜினிதேவி, சண்முகநாதன், விமலாதேவி, பேரப்பிள்ளைகள் சி. உமாசுதன், ச. வித்யா, சி. சுதாகரன், ச. வேந்தன், வி. விக்னு. 4793

## Alliance Francaise

(International School of French Language & Cultural)
Classes in FRENCH for beginners will commence soon.
French feature films are lent to Organisations free of charge.
16 mm projector available on nominal rent.

Further details:
ALLIANCE FRANCAISE,
130, 1st Cross Street,
Jaffna.
Tele: 7782 (4743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"சீதனம் தந்தாலன்றி மணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லும் இளைஞன் தான் கற்ற கல்விக்கும் தனது நாட்டுக்கும் இழிவு தேடியவன் ஆவான்."

-மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

# இந்திரா அலையும் தமிழ் நாட்டு அரசியலும்

இந்தியாவில் வீசிய இந்திரா சூறுவளி ஓரளவு ஓய்ந்து விட்டது. இப்பெருங்காற்றில் கணக்கற்ற பெருந்தலைகள் எல்லாம் உருட்டப்பட்டன. நாட்டில் ஒருநிலையான ஸ்திரமான எதிர்க்கட்சியே இல்லாத வகையில் இச்சூறுவளி அடித்தோய்ந்து விட்டது. மற்றும் கட்சிகள் ஆணிவேரோடு புரட்டப்பட்டுவிட்டன.

இந்திய துணைக்கண்டத்தின் உயர்ச்சி இந்திராவில் தான் தங்கியுள்ளது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன் அமரர் ஜெயப்பிரகாஷ் நாராயணின் மதிப்பிற்கு மதிப்புக் கொடுத்த மக்கள் இந்திராவை ஓட ஓட விரட்டியடித்தனர். தனது சொந்த மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் ஒருதொகுதியேனும் கைப்பற்றமுடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். அல்லாமலும் குடும்ப பரம்பரையான தனது சொந்தத் தொகுதியிலேயே எழுபத்தையாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு அரசியல் கோமாளியால் தோற்கடிக்கப்பட்டார்.

இந்த அவல நிலைமை யாரும் இந்திராவுக்கு ஏற்படுமென்று எதிர்பார்கவில்லை. நாட்டின் சரித்திர வரலாற்றின் கதாநாயகனான நேருவின் செல்வமகள் - பாகிஸ்தானை முறியடித்ததோடு இரு கூறுகளாகத் துண்டாடிய வீரவனிதை எப்படித்தான் மக்களால் ஒதுக்கப்பட்டார் என்று எண்ணும் போது அரசியலில் எதுவும் நடக்காதது நடந்து விடும் என்பது தெளிவாகிறது.

மக்கள் கொடுத்த உரிமையை மக்கள் அளித்த தீர்ப்பை ஜனதாக் கட்சியினர் நாட்டின் நலனை மறந்து ஒரு இந்திராவையும் அவர் மகன் சஞ்சேயையும் ஒழித்துகட்டுவதிலும் பதவி ஆசையால் ஏற்பட்ட உட்பூசல்களாலும் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டனர்.

இந்த அரசியல் சதுரங்கத்தில் அன்னை இந்திரா மிக நிதானமாகவும் சாதுரியமாகவும் காய்களை நகர்த்தித் தனது எதிரிகளை ஒருவர்பின் ஒருவராக ஒழித்துக்கட்டி விட்டார். இந்த ஈடு இணையற்ற இராஜதந்திரத்தை சாணக்கியத்தின் வேகத்தை வரலாற்று ஆசிரியர்கள் அழகாகப்படைத்துப் பிற்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லவேண்டும்.

இந்த அரசியல் ஆட்டத்தால் இடைத்தேர்தல் உருவாகியது. பாரதயுத்தத்திற்கு படைகள் சேர்த்தது போல் பெருங்கட்சிகள் தமக்குத் துணைக்கட்சிகளை நாடத் தொடங்கின. இந்த நாடகத்தைப் பத்திரிகை வாயிலாக அறிந்தவர்கள் கேட்டவர்கள் எல்லாம் இந்திய அரசியலின் போக்கைப்பார்த்து எள்ளி நகையாடச் செய்தார்கள்.

இந்தநிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் எம். ஜி. ஆர். கூட ஒரு கேலிப்பொருளாகக் காட்சியளித்தார். அவரின் சலனபுத்தி அரசியல் விவேகம் எல்லாம் அடுப்படிக்குத்தான் உதவுமேயல்லாது அரசியலுக்கு உதவாது என்பதை நிரூபித்து விட்டார். இந்திராவோடு கூட்டுச்சேர டெல்லி சென்றவர் பின் அவரையே காணாத நிலையில் சரண்சிங்கின் மிரட்டலுக்குப் பயந்து வந்துவிட்டாரென்று பேசப்பட்டது.

தனது திடமற்ற தன்மையால் யாரும் எதிர்பாராத வகையில் சரித்திரங்காணாத தோல்வியை இன்று தழுவிக் கொண்டார். தமிழ்நாட்டின் முடிசூடா மன்னனாய் இருந்த எம். ஜி. ஆர். இன்று கலைஞரின் சாணக்கியத்தால் முடியிழந்துபொலிவிழந்து அடுத்து ஆவது அறியாது திணறுகிறார். சொல்லால் சுட்டவடு ஆறுமுன் டில்லிக்குப் பறந்தோடி இந்திராவிற்கு மாலையிட்டு ஒற்றுமைக்கரம் நீட்டுகிறார்.

இந்த இடத்தில் கலைஞரின் அரசியல் வேகம் சாணக்கியம் தளராத உறுதி இவைகளைப் பாராட்டியே தீரவேண்டும் வரும் மாநிலத்தேர்தலில் கண்ணோட்டம் கொண்டுள்ள கலைஞர் இந்திராவின் கூட்டை நழுவவிட அவர் ஏமாளியல்ல ஆனால் இன்றைய சூழ்நிலையில் தனிப்பெருங்கட்சியாக இந்திராகாங்கிரஸ் தமிழ்நாட்டில் வெற்றிவாகை சூடினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பொ. சபாரத்தினம்
திருகோணமலை.

## இந்தியாவில் வறுமை ஒழிப்பு:
# காந்திஜி போற்றிய — கிராமியத் தொழில்கள்

எங்கும் வறுமை என்பதே பேச்சாயுள்ளது. நாட்டின் மக்கட் தொகையில் பாதிப்பேர் வறுமைக்கோடு எனப்படுவதற்குக் கீழே வாடுவோர் என்று பொருளாதாரத்தில் வல்லாரும் அதிகாரத்தில் உள்ளாரும் திரும்பத் திரும்பச் சொல்வதால், உண்மையின் கோரத் தன்மை பழகிப் புளித்துப் போய்விட்டதோஎன்றுகூடத் தோன்றுகிறது. பாரதமக்களில் ஒரு பெரும் பங்கினர் கொடிய வறுமையில் உழல்கிறார்கள் என்ற பயங்கர உண்மை, எளிதாகத் தோன்றும் இந்தக் கூற்றுக்குப் பின் மறைந்துள்ளது. செல்வம் நிறைந்த பல மேலை நாடுகளில் போல் அன்றி- சில மேற்காசிய நாடுகளைக்கூட இதில் சேர்த்துக் கொள்ளலாம்- இந்நாட்டில் வறுமை என்றால், மற்றவர்களுடன்

> **இந்தியக் குடியரசு தினம் இன்று. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

ஒப்பிடுகையில் செல்வச்செழிப்பு இல்லாமை என்பதுடன் நிற்பது அல்ல. இங்கு வறுமை என்று சொன்னால், போதிய உணவு, உடை போனற சில அடிப்படையான அத்தியாவசியத் தேவைகள் இல்லாமை பற்றிப் பேசுகிறோம். சில பரம ஏழைகளான மனிதர்கள் எவ்வளவு கோரமான நிலையில் வாழ்கிறார்கள் என்பது மனிதக் கற்பனைக்கு எட்டாத ஒன்று.

பாரதநாட்டில் செயல்பட்டு வரும் மரபான சமுதாய அமைப்பின் பாதுகாப்பான இயல்பு காரணமாக வறுமை பரவியிருக்கும் அளவு எவ்வளவு என்பது ஓரளவு மறைந்திருப்பதாகக் கூறலாம், முக்கியமாகக் கிராமச் சமுதாயங்களில் இதைக் காணலாம். அவற்றில் வேலையில்லாதவருக்கு உணவளிக்கும் பொறுப்பை முழுக்குடும்பமும் ஏற்றுக் கொள்வதால், வேலையில்லாமை என்பது எப்போதுமே விபரீதவிளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதுகிடையாது. ஆனால் பட்டணப்பகுதிகளில் குப்பமும் கூளமுமாய் வறுமை மேலும் கண்கூடாகத் தெரியும். எனினும் நகரமோ நாட்டுப்புறமோ மக்களில் பெரும் பகுதியினரிடையே வறுமையுள்ளது என்பது, கணக்கில் கொள்ளவேண்டிய கடும் உண்மை.

1951-க்குப் பிறகு அடுத்தடுத்து ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும்கூட, வறுமை பரவியிருக்கும் அளவில் குறிப்பிடத் தக்க குறைவு கணப்படவில்லை என்பதுதான் விசித்திரம். மக்கட் தொகையில் குறிப்பிட்ட சில பிரிவினர் திட்டவேலையாலும் அபிவிருத்திப் பணியாலும் பெரும் நன்மை அடைந்தார்கள் என்பது உண்மையே யாயினும் மக்கட்தொகையில் ஒரு பெருங்கூட்டத்தை அவை எட்டாமலே விட்டுவிட்டன என்பதும் உண்மை. எனினும் பசுமைப்புரட்சி நிகழ்ந்துள்ள சிலபகுதிகளில் மக்களின் பொருள் செழிப்பில் கூடுதல் கண்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஆனாலும் அங்கு கூட, வசதி மிக்கவரான ஒரு சில பிரிவினர் பக்கமாக மட்டுமே நன்மைகள் பாயும் போக்குக் காணப்படுகிறது. கணிசமான ஒரு பெருந்தொகையானவர் பழைய நிலையிலேயேதான் நீடிக்கிறார்கள். ஒருவிதத்தில் பார்த்தால் முன்னையவிட மோசமானநிலை என்றுகூடச் சொல்லலாம்.

பலிக்காமல் போனது காரணமாயிருக்கலாம்.

### வேளாண்மை

கிராமப் பொருளாதாரத்திலும், சுமார் 80 சதவிகிதம் மக்களின் தொழிலான வேளாண்மைக்குப் பெருமைக்குரிய இடம் அளித்தாகவேண்டும். கடந்த 25 ஆண்டுகளில் நிகழ்ந்துள்ள தொழில்வளர்ச்சி நகரப் பகுதிகளில் சிந்து வேலை வாய்ப்பைத் தோற்றுவித்துள்ளதென்றாலும், நாட்டுப் புறத்திலும், பொதுவாக நாடு பூராவிலும் அதிக விளைவை அது ஏற்படுத்தவில்லை. முக்கால் பங்கிற்கும் அதிகமான மக்கள் வாழ்விற்கு நிலத்தையே நம்பியிருப்பதால் வறுமை ஒழிப்பிற்கான ஒவ்வொரு முயற்சியும், அடிப்படையான விவசாய உறவுப் பிரச்னைக்கான தீர்வுடன் துவங்கவேண்டும். விளைச்சலைக் கூட்டுவதில் விவசாயியின் அக்கறையைக் கூட்டும் பொருட்டு, உழுவோருக்கு நிலத்தை அளிப்பது இதனால் அவசியமாகும். நாட்டின் சில பகுதிகளில் வெற்றியுடன் நிகழ்ந்துள்ள பசுமைப் புரட்சியைக்கூட, அதிலிருந்து தோன்றும் கூடுதல் செழிப்பு ஏழை விவசாயிக்கும் பணக்கார விவசாயிக்குமிடையே நியாயமாகப் பகிர்வு ஆகும் வகையில் சீரமைக்கவேண்டும்.

கடந்த காலத்தில் நிலச் சீர்திருத்தங்களை அரை மனத்துடன் நிறைவேற்றியதுபோல் அன்றிப் பொருளுள்ள முறையில் நில விநியோகம் நடைபெற்றால்தான் இதைச் செய்ய முடியும். இந்த நிலைமையில் ஜப்பானில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் அடுத்தாற்போல நடந்தது. பின்பற்றுவதற்குரிய நல்ல உதாரணமாகும். அப்போது அந்நாட்டில், நிலத்தின் மீதான முந்தைய உரிமை அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டு, உழுவோருக்கு நிலம் அளிக்கப்பட்டது உடனே வேளாண்மை உற்பத்தி இதனால் உயர்ந்தது. இதேபோல் சைனாவிலும், கிராமங்களில் கம்யூன் என்னும் சமுதாயங்களை அமைத்து, உற்பத்திப் பட்டாளங்களிடமும், குழுக்களிடமும் வேளாண்மைப் பொறுப்பை அளித்ததை அடுத்து விளைச்சல் கூடியுள்ளது. நிலப்பரப்பில் 11 சதவிகிதத்திலேயே சாகுபடி நடக்கிறதென்றாலும், 30 கோடி டன் தானியத்தை அந்நாட்டால் உற்பத்தி செய்யமுடிகிறது. பாரதநாட்டில் நாமோ, இன்னும் அதிக அளவு நிலத்தில் சாகுபடிசெய்தும்கூட அதில் பாதிக்குக் குறைவாகத்தான் உற்பத்தி செய்கிறோம்.

## ராம் கே. வேபா
(சிறுகைத்தொழில் ஆணையாளர்)

இன்னொரு துரதிருஷ்டமான விஷயம் என்னவெனில், ஏழை பணக்காரர்களிடையே ஏற்றத்தாழ்வு விரிவாகி வந்துள்ளது. மக்கட் தொகையில் வசதிமிக்க பிரிவினரே வளர்ச்சித் திட்டங்களால் நன்மை பெற்றது இதற்கு முக்கிய காரணம். உண்மையில் அனைத்துலகிலுமாக நடப்பதன் சிறிய பிரதியே இது. அனைத்துலகில் மாபெரும் உதவித் திட்டங்கள் இருந்தபோதிலும் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ர்சிக் குறைவான நாடுகளுக்குமிடையேஏற்றத்தாழ்வு பெருகித்தான் வருகிறது. நாட்டுக்குள்ளேயும், நகர-கிராம வேறுபாடு வளர்ந்து வருகிறது. இதன் பலனாக, ஏழை செல்வருக்கிடையே ஏற்றத் தாழ்வைக் குறுக்குவதற்கென மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்கள் உண்மையில் அதை வளர்க்கவே உதவின.

### கிராமம் வளரவேண்டும்

ஏழைமை ஒழிப்பு எளிய காரியம் இல்லை. நீண்ட காலமாக நாட்டை வருத்திவரும் மாபெரும் வறுமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் குறுக்கு வழி கிடையாது. வறுமையை ஒழிப்பதற்கான தீர்வு எதுவும் கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதை மேம்படுத்துவதற்கான மிகச் சிறந்த வழியை ஆராயவும் வேண்டும். ஏனெனில், நாட்டின் செழிப்பிற்கே திறவுகோலை வைத்திருப்பது, ஒரு வகையில் கிராமம்தான். உண்மையில், கடந்த 25 ஆண்டுகளில் செய்த திட்ட முயற்சி ஓரளவு தோற்றதெனில், திட்ட ஏடுகளில் இது நன்கு ஏற்கப்பட்டுள்ள போதிலும், திட்டமிட்ட பொருளாதாரத்தின் மூலகாரணமாகக் கிராமத்துக்குத் தரவேண்டிய முதன்மையைத் திட்டங்கள் சில சமயங்களில் பிரதி

### சிறு தொழில்கள்

எனினும், வேளாண்மை உற்பத்தித் திறனைக் கூட்டுவது அவசியமென்றாலும், அது போதுமானது அல்ல. செழிப்பைப் பெருக்குவதற்கு, வேறு பல தொழில்களுக்கு வகை செய்வதும் அவசியம். மீன் பண்ணை, பாற்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்புப் போன்ற சார்புத் தொழில்களை ஆரம்பிக்கலாம். மற்றும் உள்ளூர்க் கச்சாப் பொருள்களையும், உள்ளூர்த் திறன்களையும் பயன்படுத்தும் பற்பல கிராமத் தொழில்களை அமைப்பதன் மூலமும் இதைச் செய்யலாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

"சவால் சமுதாயத்துக்கு அல்ல நேர்மைக்கு" என்ற தலைப்பில் எமக்கு வந்த கடிதம் ஒன்றை சென்ற செவ்வாய்க் கிழமை இங்கு வெளிட்டிருந்தேனல்லவா? நானூறு ரூபாயைப் பறி கொடுத்தவருக்கு உதவு முகமாக ஒருவர் நான்கு 25 சத முத்திரைகளை அனுப்பியிருந்தார். கிரிமலையைச் சேர்ந்த சற்குணம் கிருபாகரன் என்னும் வாசக அன்பர் ஐந்து ரூபாய்க்கு தபாற்கட்டளை அனுப்பிஅத்துடன் பின்வரும் கடிதத்தையும் அனுப்பியிருக்கிறார்.

22 'ஈழநாடு' நாடும் நடப்பும் சரி மாணவனை விடுவோம் உற்றவர் - பெற்றவர் - மற்றவரின் கடமை-பொறுப்பு என்னவது; கன்மம் ஜனிக்கிறது.

குற்றஞ் சாட்டப்பட்டு குத்திக் காட்டப்பட்ட சவாலை ஏற்க வேண்டிய இந்தக் கேடுகெட்ட சமுதாயத்தில் நானும் ஒருவன். அதன் காரணத்தினால் நொந்து பட்ட உள்ளத்துக்கு சமுதாயம்குறிப்பாக மாணவன் பெற்றோர் ஜென்மக்கடன் பட்டிருக்கிறார்கள். சிறுதுளி பெருவெள்ளமாகட்டும் இந்த என் 5 ரூபாவினால்."

பணத்தைக் களவு கொடுத்த அன்பர் சின்னத்தம்பி நல்லையா தமது விலாசத்தைக் கொடுக்கவில்லை. தொலைந்த பணத்துக்காக நிதி உதவி செய்யும் படியும் வேண்டுகோள்விடவில்லை. சமுதாயத்தின் நிலையையிட்டு வருத்தம் தெரிவித்து களவெடுத்த பையனோ அவனது பெற்றோரோ மனம் திருந்தி எடுத்த பணத்தைத் திருப்பி ஒப்படைப்பர் என்றே அவர் எதிர்பார்த்திருந்தார். அந்தப் பையனைப் பற்றிய விபரம் தெரிந்தால் 'ஈழநாடு' அலுவலகத்துக்குத் தெரிவிக்கும்படி தானே கேட்டிருந்தார். என்றாலும் அன்பர்கள் அனுப்பிய ஒரு ரூபாய்க்குரிய முத்திரைகளும் ஐந்து ரூபாய் தபாற் கட்டளையும் திரு. சின்னத்தம்பி நல்லையாவை எதிர்பார்த்து எம்மிடமிருக்கின்றன.

ஃ ஃ ஃ

மா, சீனி, பாண் முதலிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விலையேறி விட்டன. மண்எண்ணையின் விலையும் விரைவில் அதிகரிக்கலாம் என்று பேசிக்கொள்ளப்படுகிறது. சீமெந்தின் விலையும் உயர்ந்துவிட்டது.

இப்படிப் பொருள்களின் விலைகளை உயர்த்திவிட்டு பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்களை இலவசமாகக் கொடுப்பதால் என்ன பயன்? இப்படியான கருத்துக்களை இப்போது எந்த இடத்திலும் கெட்க முடிகிறது.

--ஊர்சுற்றி

## ஐ. தே. கட்சி வெற்றி

(மட்டக்களப்பு)

ஏறுவூர் வடக்குபலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஏழு பேரும் வெற்றி பெற்றனர்.

மட்டக்களப்பு கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனாப் கே. எல். எம். காதர் ஹசீம் தலைமையில் நடைபெற்ற இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டோர் 35 வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டோர் 26 வாக்குகளும் பெற்றனர்.

வெற்றி பெற்றோர் வருமாறு:-

சி. வைரமுத்து, கே. விநாயகமூர்த்தி, ஏ. தெய்வநாயகம், எஸ். திருஞானம், பி. வேல்நாயகம், வி. ஞானப்பிரகாசம், ஜனாப் சி. மீரா மொகதீன். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்பாண்டக் கலைஞர், கொல்லர், தச்சுக் கலைஞர், தோல் திருத்துகிறவர் போன்ற கிராம வினைஞர்களுக்குப் புத்துயிர் அளிக்கும் விஷயமும் உள்ளது. ஒரு காலத்தில் கிராமச் சமுதாயத்திற்கு முக்கியமான பணி செய்து கொண்டிருந்த இந்தத் தொழில் வல்லுநர், தற்கால நிலைமையின் அழுத்தங்கள் காரணமாக அச்சமுதாயங்களுக்குப் பொருத்தமற்றவர்கள் ஆகிவிட்டார்கள். கிராமத் தொழில் அணியில் ஒரு கணிசமான பகுதியினரான இந்த வினைஞர்கள் சமுதாயத்தின் தேவைகளை ஈடுசெய்வதற்குத் தகுதி உள்ளோராய்த் தம்மை மீண்டும் ஆக்கிக் கொள்ளும்பொருட்டு, தமது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.

### மாவட்டத் தொழில் மையங்கள்

இந்த நோக்கத்துடன் தான் மாவட்டத் தொழில் மையங்கள் திட்டம் 1978 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலாக்க இயக்கத்தைக் கிராமப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் பிரச்னையை ஒரு புதுநோக்குடன் காணுவதற்கு அது வகைசெய்கிறது. கடந்த காலத்திலும் கிராமத் தொழில்கள் திட்டம், கிராம வினைஞர்கள் திட்டம் போன்ற பல திட்டங்கள் மூலம் இந்த முயற்சி நடைபெற்றிருந்தது. ஆனால் அரை மனத்துடன் தான் அவை நிறைவேற்றப்பட்டிருந்தன. மேலும் மக்கட்தொகையில் ஒரு சிறிய பகுதிக்கும் நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் மட்டும் பொருந்துபவையாக இருந்தன.

இதற்கு மாறாக மாவட்டத் தொழில் மையம். பொருளுள்ள தொழிலாக்கத்தைக் கிராமப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கான ஒரு வினையூக்கியாகவும் அச்சாணியாகவும் விளங்கும். ஒவ்வொரு மையத்திலும் ஒரு பொது நிர்வாகியும் ஒரு பணித்துறை நிர்வாகிகளும் இருப்பார்கள். பொருளாதார ஆய்வு, பொறி மற்றும் சாதனம், கடன் வசதி, கச்சாப் பொருள்கள், பயிற்சி விற்பனை வசதி, கிராமத் தொழில்கள் ஆகியபொறுப்புகளை மணித்துறைநிர்வாகிகள் கொண்டிருப்பார்கள். கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்கான இயக்கவாகுள்ள நிறுவனக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கென, வேறுமாநில அரசு நிறுவனங்களுடனும் மையத்துவம் பற்றிய பணித்துறை நிறுவனங்களுடனும் வலுவான பிணைப்புகளை மையங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1978 மே மாதத்தில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும், ஊழியர்களைத் தெரிந்தெடுப்பதும் பயிற்சி அளிப்பதும் பூர்த்தியான பிறகு 1978 செப்டம்பரில் தான் மாவட்டத் தொழில் மையங்களின் முதல் தொகுதி இயங்க ஆரம்பித்தது. பிறகு ஆறுமாதங்களில் மையங்கள் கண்ட முன்னேற்றம் கவர்ச்சியானது தகவல் கொடுத்துள்ள 194 மையங்களில் 60,000 தொழில் முனைவர்கள் இனமறியப்பட்டுள்ளார்கள். 1.46 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் 14,000புதிய தொழில் நிலையங்கள் பதிவு செய்யப்பட்டன. 1979-80இல் 1979 ஆகஸ்ட்டுக்குள் தொழில்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்பட்ட 400 மாவட்டத்தொழில் நிலையங்களில் கூடுதல் வேலை வாய்ப்பிற்கான குறியளவு 10 லட்சம். ஒரு நிலையத்துக்குச் சராசரியில் 2,500 என்ற கணக்கின் அடிப்படையில் ஆகும் இது.

ஆனால் சில மாநிலங்கள் சராசரிக்கென குறித்துள்ள தொகை வெகு கூடுதலாகும். உதாரணமாகத் தமிழ்நாடு 1979-80 ற்கான செயல் திட்டத்தில் ஒவ்வொரு மையத்துக்குமென நிர்ணயித்துள்ள குறியளவு 8,681 பேராகும். குஜராத்தின் இலக்கு 8,030. மொத்த உற்பத்தியில், 745.79 லட்சம் ரூபாயுடன் குஜராத் முதலில் நிற்கிறது. ஆந்திரப் பிரதேசத்தில் உற்பத்தி 668.17 லட்சம் ரூபாய் பீஹாரில் 523,54 லட்சம் ரூபாய்.

### செயல்பாடு

எதிர்பார்த்தவாறு, திட்டத்தின் செயல்பாட்டுத் தன்மையில் பெரும் வேறுபாடு உள்ளது. பொதுப்படையாகச் சொன்னால், ராஜஸ்தான், ஒரிஸ்ஸா, தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பீஹார், மத்தியப்பிரதேசம் ஆகியவற்றில் அது நன்றாகச் செயல்பட்டுள்ளது. மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கேரளம், மேற்கு வங்காளம் ஆகியற்றில் நிதானமாகச் செயல்பட்டுள்ளது. பஞ்சாப், ஹரியாணா, ஹிமாசலப் பிரதேசம் ஆகியவற்றில் இனி மேல்தான் வேகம் பிடிக்க வேண்டும். வடகிழக்குப் பிராந்தியத்தில் மனிதத் திறன், ஆதார வசதிகள் ஆகியவை பற்றிய பிரச்னைகள் இருப்பது தெளிவு.

### ஆர்வம்

கடைசியில் பார்த்தால், கிராமப்பகுதிகளில் புதிய தொழில் முனைவு ஆர்வம் ஒன்றை மாவட்டத் தொழில் மையம் தழைக்கச் செய்ய வேண்டும். மாவட்டத் தொழில் மையங்களின் ஊழியர்களிடேயும் கிராமத் துறையின் பிரச்னைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள மற்ற ஊழியர்களிடையேயும் ஒரு புதிய பண்பாடு உருவாவது தேவை என்று கூடச் சொல்லலாம். மக்களிடையே மறைந்துள்ள தொழில் முனைவுத் திறன் புத்துயிர் பெற்றுப் புதிய பலன்களை அளிப்பதற்குகந்த சூழ்நிலை ஒன்றை அவர்கள் தோற்றுவிக்க வேண்டும். இப்போதுள்ள நடைமுறைகளைத் தாராளமாக்குவது, தொழில் முனைவர்களுக்குப் பொருளுள்ள தகவல் அளிப்பது, உரிய சமயத்தில் கடன் கிடைக்க வசதி செய்வது, தக்கதான தொழில் நுட்பத்தின் உருவாக்கலும் வழங்கலும், பயிற்சித்திட்டங்களை இயக்குவது, கிராமத் தொழில்களின் பொருள்களுக்கு உரிய விற்பனை வசதி ஆகியவை அந்தச் சூழ்நிலையின் அம்சங்களாயிருக்கவேண்டும்.

### புதியநோக்கு

கிராம தொழில்வளம் என்னும் பிரச்னையையே ஒருபுதிய நோக்குடன் காணுவதற்கு மாவட்டத் தொழில் மையம் வசதி செய்ய வேண்டும். புகைக்கும் புகைப்போக்கியின் வியாபகம் என்ற முறையில் தொழில் என்பதை இன்னமும் கருதிக் கொண்டிருக்க முடியாது. ஒரு பகுதியில் ஏற்கெனவே உள்ள திறன்களையும் வளங்களையும் முழு மொத்தமாகத்திரட்டி அவை மேலும் மேலும் வளர்ந்தோங்க உதவுவதாக அதைக் கருத வேண்டும்.

இந்த நிலைமையில்தான், மத்திய விவசாய அமைச்சகம் 2,400 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் நிறைவேற்ற முற்பட்டுள்ள ''ஒருங்கிணைப்பான கிராம வளர்ச்சித் திட்டம்'' என்பது சிறப்புப் பொருள் பெற்றுப் பொலிகிறது. மாவட்டத் தொழில் மையமானது இந்தத் திட்டத்துடன் நெருங்கி ஒத்துழைத்து, தன்னைச் சுற்றிலும் எங்கெங்கும் ஏராளமாயுள்ள மாபெரும் ஆற்றல்களையும் வளங்களையும், நல் வாழ்வுக்காக ஏங்கும் நாட்டுப் புறத்தாருக்கு வேண்டிய பொருள்களாக மாற்றவேண்டும். கிராமங்களில் சீர் பெருகச் செய்ய வேண்டும். பணி மகத்தானதுதான்.

ஆனால், செய்து முடிப்பது சாத்தியமே. மாவட்டத் தொழில் மையங்களின் ஊழியர்களிடையேயும் பிரச்னையில் சம்பந்தப்பட்ட அனைவரிடையேயும் பணியில் பற்றும் கடமை உணர்வும் இருந்தால் இது சாத்தியமே. நாட்டை நிர்மாணிப்பதற்குப் புதிய வீரசாகசங்கள் புரியும் வண்ணம் நாட்டார் அனைவரையும் எப்படி எழுப்பி விட முடியும் என்பதைச் சைனு சமீபத்தில் காட்டியது. காந்தியும் நேருவும் போன்ற மனிதர்களின் தலைமையில் அற்புதங்கள் நிகழ்வதைக் கண்டிட்ட பாரதமும், விடுதலைப் போராட்டத்தின் நெருக்கடியில் போலவே அமைதிக் காலத்திலும், எடுத்த பணியை முடிக்கக்கூடிய அளவுக்குத் தேவையான கடமைப்பற்று உணர்வு நாட்டில் இன்னமும் இருக்கவே செய்கிறது என்பதை நிலைநாட்ட வல்லது என்பது திண்ணம்.

# நினைவிலிருக்கும் பெரியவர்

எல்லோரது அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாக வாழும் வாய்ப்பு மிகச் சிலருக்கு மட்டுமே கிடைக்கும். இவர்களில் ஒருவர் தான் தொல்புரத்தைச் சேர்ந்த மறைந்த பெரியார் நல்ல சேகரம்பிள்ளை சிவசுப்பிரமணியம்.

இலங்கையில் பல பாகங்களிலும் குறிப்பாக பதுளையில் சிறப்பாக ஓவசியராகக் கடமையாற்றி குறுகிய காலம் தமது சொந்தக் கிராமத்தில் தமது இறுதிக்காலத்தை கழிப்பதற்கு வந்து சேர்ந்தார்.

தூயவெள்ளை உடை உடுத்து கையில்குடையுடன் அன்றாடம் புதினம்விசாரிக்கும்இப்பெரியாருடன் தினமும் உறவாட வாய்ப்புக்கிடைத்தது. வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாகும். பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவித்து தமது உதவியை மற்றவர்களுக்குதெரியாது செய்து வந்ததையும் வளக்கம்பரை அம்மன் கோவில் பஜனைச் சபையினருக்கும் வேண்டிய உதவிகளை செய்துவந்தமையும் நாம் மறக்க முடியாது.

இன்றைய அமைச்சர் பலர் இப்பெரியாரின் நண்பர்களாக இருக்கின்றார்கள் பதுளையின் தேசியப்பேரவை உறுப்பினராக வரும் வாய்ப்புக்கள் இவரை வட்டமிட்டது. பதுளை நகரின் பல பொது நிறுவனங்களின் பாதுகாவலராகவும் சொத்துக்களின் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கிய இவர் பதவியை பட்டத்தை அறவே விரும்பாது வாழ்ந்ததை நாம் பலரது வாயிலாக அறிந்திருக்கின்றோம் இவ்வாறுக பெருமைக்குரிய இப்பெரியார் எமது சூழலில் மேலும் சில காலம் வாழ்ந்திருந்தால் எமக்கு பெரும் சிறப்பாக அமைந்திருக்கும் விதியின் முன்பாக எம்மால் என்ன தான் செய்ய முடியும் எல்லாம் அம்மை அப்பனின் செயல் பெரியார் ந. சிவசுப்பிரமணியத்தின் ஆத்மா சாந்தியடைய அன்னையை வேண்டுவதேயாகும்.

—க. வாமதேவன்
செயலாளர், வழக்கம்பரை சன சமுக பஜனைச்சபை.

# நாயனார் கேரள முதல்வர்

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைவராக திரு. ஈ. எல் நாயனார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கேரள மாநில கவர்னர் திருமதி ஜோதி வெங்கடாசலம் திரு. நாயனாரை புதிய மந்திரிசபையை அமைக்குமாறு கேட்டுள்ளார். (கு)

# டைனமைட் வைத்து மீன் பிடித்தனராம்

## நடுக்கடலில் 6 பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

நடுக்கடலில் டைனமைட் வெடிவைத்து மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததாகக்கூறப்படும் ஆறு நபர்களை பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். ஆறு நபர்களும் தலா ரூபா 100 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் அவர்கள் பயன்படுத்திய யந்திரப்படகும் 15 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டது.

யாழ். குடாக்கடல் பிரதேசத்திலுள்ள கல்முனை என்ற இடத்தில் டைனமைட் வெடி வைத்து நடுக்கடலில் சிலர் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மீன்பிடிப்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. பி. இராமநாதன் பொலிசார் சகிதம் அவ்விடத்துக்கு விரைந்து சந்தேக நபர்களை மடக்கிப் பிடித்தார்.

சி. இராசசூரி, ம. யேசுதாசன், ஆர். அந்தோனிப் பிள்ளை, ஆர். அலோசியஸ், ஆர். சி. ரொபின்சன், பி. கிறேசியஸ் ஆகியவர்களே கைதுசெய்யப்பட்டவர்கள்.

இவர்களிடமிருந்து ஏராளமான டைனமைட்வெடிகள், கெற்புகள், திரிகள் போன்றவை கைபபற்றப்பட்டதுடன் வெடிவைத்துப் பிடிக்கப்பட்ட பெருந்தொகை மீனும் பிடிபட்டது.

நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீதான வழக்கு பெப்ரவரி மாதம் 18ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படுமெனத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி கைப்பற்றப்பட்ட மீன்களை வைத்திய பரிசோதனைக்கு அனுப்பும்படியும் டைனமைற் வெடிகளை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட மீன்கள் டைனமைற் வைத்து பிடிக்கப்பட்டதென டாக்டரின் தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிபதி முன்னிலையில் மேற்படி மீன்கள் அழிக்கப்பட்டன. (கொ)

# 'பாலா' நினைவுக்கூட்டம் யாழ். நகரில் நடத்தப்படும்

## இ. த. ஆ. சங்க செயற்குழு முடிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அகால மரணமான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் ந. பாலசுப்பிரமணியத்தின் நினைவாக அடுத்த மாதம் 16ந் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்துவதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

யாழ். சங்கப் பணிமனையில் தலைவர் திரு. வனசிங்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய சில தீர்மானங்கள் வருமாறு:

''அமரர் பாலசுப்பிரமணியத்தின் நினைவாக நினைவு மலரொன்று வெளியிடுவது. அதே தினத்தில் அவரது உருவப்படத்தைத் திரைநீக்கஞ் செய்துவைப்பது.

அன்னாரின் குடும்பத்திற்கு உதவும் வகையில் சங்க உறுப்பினர்கள், இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்து நிதி சேகரிப்தென்றும் அதற்கெனத் தலைவர் திரு. எஸ். கே. வனசிங்கா பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோரைத் தலைவராகக் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவுசெய்பப்பட்டது. (ஏ)

**வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி.**

# 'ஈழநாடு' ஆதரவில் நடாத்தும் குறூப் சாம்பியன் போட்டிகள்

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் குறூப் சாம்பியன் போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறுகின்றன இன்றைய 11 வீரர் ஆட்டத்தில் குளமன்கால் சென், சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஏழாலை பறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகம் போட்டியிடும். 4-45 மணிக்கு இடம்பெறும் போட்டியில் ஏ குறூப் சாம்பியன், கொழும்புத்துறை ஜெட் லையினேஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பி குறூப் சாம்பியன் பலாலி அண்ணா விளையாட்டுக்கழகம் போட்டியிடும்.

### நாளைய போட்டிகள்

நேற்று முன்தினம் குட்டியப்புலம் அம்மன் விளையாட்டுக்கழகமும், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட போட்டியில் வெற்றிபெற்ற கோஷ்டி, நாளைய 7 வீரர் ஆட்டத்தில் ஏழாலை பறக்கும் இளைஞர் ஞர்விளையாட்டுக்கழகத்துடன் போட்டியிடும். 11 வீரர் ஆட்டத்தின் முதல் போட்டியில் மயிலங்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி உதயகலைவாணி விளையாட்டுக்கழகம் போட்டியிடும். 4-30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் பி குறூப் சாம்பியன் பலாலி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சி குறூப் சாம்பியன் ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக்கழகம் போட்டியிடும்.

### போட்டி முடிவு

கொழும்புத்துறை ஜெட் லையினேஸ் விளையாட்டுக்கழமும், பலாலி அண்ணா பி விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்ட 7 வீரர் போட்டியில் ஜெட்லையினேஸ் 3-0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது. திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

......

# மொறட்டுவ பல்கலைக்கழகம்

## மீண்டும் மூடப்பட்டது

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை திறக்கப்பட்ட மொறட்டுவப் பல்கலைக்கழகம் மீண்டும் மூடப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகத்தால் இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 மாணவர்களை மீண்டும் எடுக்கவேண்டுமென்று கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததனுல்தான் மூடுவிழா நடைபெற்றது. விரிவுரைகளுக்குச்செல்வதில்லையென்று கூறிய மாணவர்கள் குழப்பங்களை விளைவித்ததாகவும் கூறப்படுகின்றது. (நா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ். சித்த ஆயுர்வேதக்கல்லூரி:

# அரசு மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டுகிறது-மேயர் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலேயே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் சித்த ஆயுர்வேதக் கல்லூரிக்கு அரசாங்கம்வழங்கிய மானியம் நிறுத்தப்பட்டதுடன் இக்கல்லூரியின் அபிவிருத்தியில் அரசு மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் இருந்து வருவது குறித்தும் யாழ்.மேயர் திரு. இராசா விசுவநாதன் கவலை தெரிவித்தார்.

இக்கல்லூரிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட கம்பஹா ஆயுள்வேத கல்லூரி மிகச் சிறப்பாக அபிவிருத்தியடைந்திருப்பதை மேயர் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம் சித்த ஆயுள் வேதக் கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வைத்திய சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே மேயர் இக் கருத்துக்களை வெளியிட்டார்.

கல்லூரி அதிபர் டாக்டர் டபிள்யு ஜெகோரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் முதல்வர் திரு. விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

டாக்டர் பஸ்தியாம்பிள்ளை அவர்கள் 1925-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இந்த சித்த ஆயுர்வேதக் கல்லூரியை நிறுவினார். இக்கல்லூரியை வடஇலங்கை சுதேசவைத்திய சபையே மேற்பார்வை செய்து வருகிறது. இக் கல்லூரி நிறுவப்பட்டபின் பல வருடங்கள் கழித்தே கம்பஹாவில் பிறிதோர் ஆயுர்வேதக் கல்லூரி அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கல்லூரி இன்று அரச அங்கீகாரம் பெற்று இலட்சக் கணக்கான ரூபா பணத்தை அரசிடம் மானியமாகப்பெற்று விருத்தி செய்யப் பட்டுள்ளது. இலங்கையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள இக்கல்லூரிக்கு 1951-ம் ஆண்டே அங்கீகாரம் அளிக்கப்பட்டதாயினும், பின் 1961 ஆம் ஆண்டு முன் அளிக்கப்பட்ட அந்த அங்கீகாரமும் இரத்துச் செய்யப்பட்டது. மென்மேலும் மானியங்கள் தந்து கல்லூரியின் தரத்தை உயர்த்தியிருக்க வேண்டும். ஆட்சி அதிகாரம் எம் கையில் இருந்திருந்தால் இம் மாற்றுந்தாய் மனப்பான்மையைத் தவிர்த்திருக்கமுடியும் சீனவில் சுதேச வைத்திய முறை சோஷலிசப் புரட்சிக்குப் பின் அடைந்த மறு மலர்ச்சியைத் திராவிட வைத்திய முறையான சித்த வைத்தியமும் அடைந்திருக்கும். கொழும்பில் வெகு காலத்தின் பின்னர் நிறுவப்பட்ட ஆயுர் வேதக் கல்லூரி விருத்தியடைந்து இன்று ஒரு பல்கலைக் கழகத்தின் அந்தஸ்தை அடைந்திருப்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

### யாழ். எம். பி.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

"மேலைத்தேச வைத்திய முறைகள் இந்த நாட்டில் அறிமுகமாவதற்கு முன்பிருந்தே எம்மவர்களால் கைக்கொள்ளபபட்டிருந்த சித்த ஆயுள் வேத வைத்திய முறை இன்று வரை நடைமுறையில் இருந்து வந்தாலும் அதன் வளர்ச்சி தேய்ந்து கொண்டே வருவது கவலைக்குரியதாகும். இவ் வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கும் இவ்வைத்தியத் துறைக்கு உரிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஆவன செய்வேன்.

கம்பஹா வைத்தியசாலையைப் போன்று நல்ல முறையில் இதனை நடத்த அரசு மட்டுமன்றி நாமும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அதற்கு சித்த ஆயுள் வேத டாக்டர்களும், பயிலுனர்களும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (கொ)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"இன்றைய அரசியல் நிலையும், மக்களின் விடுதலைப் பாதையும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை, அல்வாய் நக்கீரர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை தேசபக்த வாலிபர் இயக்க, அல்வாய்க் கிளையினர் ஏற்பாடு செய்துள்ள இக் கருத்தரங்கு திரு. சி. முருகானந்தம் தலைமையில் நடைபெறும். (கொ)

## "இலவச பாடநூல் விநியோகம்:

# மலையக சிறுர்களை கல்வி கற்கத் தூண்டியுள்ளது"

[நாவலப்பிட்டி]

"வசதியற்ற நிலையில் தமது பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியையே கருத்திற்கொள்ளும் தோட்டப்பாடசாலைப்பிள்ளைகளின் பெற்றோர் இவ் விலவச பாடநூல் விநியோகத்திட்டத்திற்கு மிகுந்த ஆதரவளித்துள்ளார்கள்"

மேற்கண்டவாறு நாவலப் பிட்டி, கந்தலோயாத் தோட்டப்பாடசாலையில் பாட நூல்களை மாணவர்களுக்குக் கையளித்துப் பேசிய பாடசாலை அதிபர் திரு. ப. க. கனகசபாபதி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "மலையகமக்களின் கல்விக்கு அரசாங்கம் பல திட்டங்களை அமுல் நடத்திவருகின்றது, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினுல் அன்றுடம் உழைத்து ஜீவனம் நடத்தும் மக்களுக்கு இலவச பாட நூல் விநியோகம் ஓரளவு சுமையைக் குறைப்பதாகவே அமைந்துள்ளது. தொழிலிலேயே கவனத்தைச் செலுத்தும் இளம்பிள்ளைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை வழங்கியதால் அவர்களது கவனம் கல்வித்துறையில் செலுத்தப்பட வழி செய்யப்பட்டுள்ளது" என்றார். (நா)

# கொலைவழக்கில் எதிரிக்கு 2 வருடக் கடூழியச்சிறை

(கொழும்பு)

மாமியாரைக் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், கைமோசக் கொலைக்குற்றத்தை ஒப்புக் கொண்டமருமகனுக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு கம்பஹா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே.ரி. சி. சுவாரிஸ் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது,

இவ்வழக்கில் கம்பஹாவில் 78 அக்டோபர் 10-ம் தேதி பி. எம். குசுமபாலா என்பவர் அவரது மாமி கே. ஹேமலதாவைக் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஜி. ஜி.பொன்னம்பலம்(ஜூனியர்) ஆஜரானர். (ச)

# "பிறந்த பொன்னுட்டிற்கு புகழைத் தாருங்கள்"

## கட்டடத்திறப்புவிழாவில் 'இராசு'

(மட்டக்களப்பு)

"பெற்றதாயையும் பிறந்த பொன்னுட்டையும் மாணவ சமுதாயம் மதித்து நடக்க வேண்டும்" என்று பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை கோட்டைமுனை அரசினர் கல்லூரி புதிய கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அதிபர் திரு. ஐ. சாரங்கபாணி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

"கல்வி அழியாத செல்வமாகும். இதனை அழிய விடாமல் மாணவ செல்வங்களாகிய நீங்கள் பாதுகாக்க வேண்டும். அழியவிட்டால் நிலத்தில் விழுந்து உடைந்த கண்ணுடி போன்றதாகிவிடும்.

வருங்கால சந்ததியினர் தான் இன்றைய மாணவர்களாகிய நீங்கள்! நீங்கள்தான் நாளைய உலகின் தலைவர்கள் உங்கள் மத்தியில்தான் பட்டதாரிகள், அரசியல் வாதிகள், சட்டத்தரணிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் உருவாகின்றார்கள். அதற்கு நீங்கள் உங்கள் கல்வியை அழியாமல் பெறவேண்டும் மாணவர்களாகிய உங்கள் சேவை இந்நாட்டிற்கு என்றும் தேவை. நீங்கள்தான் நாட்டை கைதூக்கி விடக் கூடிய சக்தி கொண்டவர்கள், சிறந்த கல்வியை வள்ளுவரின் குறள்படி கற்றவர்கள் மத்தியில் நீங்கள் முதலிடம் பெறவேண்டும்.

"பெற்றோர் பாராட்ட வேண்டும். ஆசிரியர்கள் புகழ வேண்டும். நாடும் வீடும் உங்களை மதித்துநடக்கவேண்டும் உங்கள் சேவை இம்மண்ணுக்கு என்றும் தேவை. பெற்ற தாயையும், பிறந்த பொன்னுட்டையும்நேசிக்கவேண்டும், சமுதாயத்தில் நற்பிரஜையாக வாழ்ந்து, பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னுட்டிற்கும் புகழை ஏற்படுத்தவேண்டும்" என்று அமைச்சர் கூறினர்.

அமைச்சரிடம் பாடசாலைக் குறைபாடுகள் எடுத்துரைக்கப்பட்டன. ஆலய வேலைகளை மேற்கொள்ளவும், கல்லூரி மதில் அமைக்கவும் உடனடியாக அமைச்சரினுல் நிதி ஒதுக்கப்பட்டது. இவ்வைபவத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. வி. வி. ஜி. சமரஜீவ, கல்வி யதிகாரி திரு. க. யோ. முத்துராஜா, பிரதமக் கல்வியதிகாரி திரு. ஜே. ஏ. சற்குணராஜா உட்படப் பலர் உரையாற்றினர்.

# கிராமத்தின் அபிவிருத்திக்கு போக்குவரத்து மிக முக்கியம்

## புதிய பஸ் சேவை ஆரம்பவிழாவில் யாழ். அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

"ஒரு கிராமத்தின்அபிவிருத்திக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் இன்றியமையாதன"

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கிளிநொச்சியிலிருந்து கோணவிலுக்கான புதிய பஸ் சேவையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

வடபிராந்திய போக்கு வரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஒருவர் திரு. யோகேந்திராவுக்கும், திரு. டட்லி குணசேகராவுக்கும் 761-வதுதேசிய சுவீப் டிக்கட்டுகளினுல் கட்டப்பட்ட சுவீப் டிக்கட் மாலையை அணிவித்தார்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

யாழ். மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக இருக்கின்ற கிளிநொச்சிப் பிரதேசத்தில் இப்போது பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

"ஒருபகுதியின் அபிவிருத்தி துரிதமாக ஏற்படுவதற்கு போக்குவரத்து சாதனங்கள் பெருங்காரணமாக அமைகின்றன. கோணவில், அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகியன அபிவிருத்தி அடையவேண்டிய பகுதிகளாகும். இப் பகுதியிலே ஏற்கனவே தச்சுத் தொழிற்சாலை ஒன்று அமைந்தது. அமைச்சர் திரு. தொண்டமான் இப்பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருக்கின்றர்.

"உங்கள் அடிப்படைத் தேவைகளில் பஸ்போக்குவரத்தும் ஒன்று. உங்கள் உற்பத்திப் பொருட்களை இடைத்தரகர்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்து கூடிய விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கிறர்கள். இப் புதிய பஸ் போக்குவரத்து இடைத்தரகர்களின் தலையீட்டினை முற்ருக ஒழித்துவிடும். நீங்களே உங்கள் உற்பத்திப் பொருட்களை நேரடியாகவேசந்தைக்குக் கொண்டுசென்று, விற்று இலாபம் சம்பாதிக்க முடியும்" என்றர்.

திரு. டட்லி குணசேகரா பேசுகையில் கூறியதாவது:

"இப் பஸ்சேவைக்கு அன்றே திட்டமிடப்பட்டாலும் திரு. யோகேந்திரா துரைசுவாமியின் முயற்சியினுல்தான் இப் பஸ்சேவை இன்று கொண்டு வரமுடிந்தது. கடந்த 7 ஆண்டுகளில் 10 பஸ்கள் மட்டும் தான் வட பிராந்தியத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த அரசு ஆட்சிக்குவந்த பின்னர் 100 பஸ்கள் கொண்டுவரப்டன. ஜனதிபதி வடபிரதேச மக்களுடன் நேசமாக வாழ விரும்புவதனுல் தான் இது போன்ற நல்ல பஸ் சேவை நடாத்த முடிகிறது. (கொ)

## வட்டு.தொகுதி ஆஸ்பத்திரிகளுக்கு நிதிஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு இவ்வருடத்திற்கான மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு 65 ஆயிரம் ரூபாவும் காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு 95 ஆயிரம் ரூபாவும் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு 60 ஆயிரம் ரூபாவும் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு 90 ஆயிரம் ரூபாவும் தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

......

## வருடாந்த இராபோசனம்

(வேலணை)

யாழ்ப்பாணத்திலுள்ள சட்டக்கல்லூரி மாணவர்மன்றத்தினர் இன்று தமது வருடாந்த இராப்போசனவிருந்து வைபவத்தை யாழ்ப்பாணம் சுபாஸ்விருந்தினர் விடுதியில் நடாத்தவிருக்கின்றனர்.

மாணவர் மன்றத் தலைவர் திரு. கே. சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விருந்துபசார விழாவில் நல்லூர் தொகுதி பா.உ. திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொளுகின்றர்.

......

## சமாதானநீதவான்

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த திரு. க. இ. வேலாயுதபிள்ளை கொழும்பு நீதிசேவை நியாயாதிக்க மாவட்டத்தின் சமாதான நீதவானுக, கொழும்பு மேலதிக நீதவான் திரு. ஜி. எம். எஸ். சமரவீர முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

1952இல் அரசாங்க சேவையிற் சேர்ந்துகொண்ட இவர் 20 வருடங்களுக்கு மேல் கொழும்பு தொழிற் கந்தோரில் கடமையாற்றினர், தற்போது கொழும்பு கச்சேரியில் சிறுகைத்தொழிற் பிரிவில் கடமையாற்றிவருகிறர்,

பல்வேறு சமூக,மத தாபனங்களுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டு இவர் தீவிரசமூகத் தொண்டாற்றி வருகிறர். சுமார் 6ஆண்டுகளுக்குமேலாக முகத்துவாரம் தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்றேர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில் அப்பாடசாலையைமூடிவிடுவதெனக் கல்வித்திணைக்களம் உத்தேசித்த வேளை இவரின் பெருமுயற்சியினுல் அத்தகைய அபாயம் நீக்கப்பெற்று மேலும் கூடிய விஸ்தீரணமும் வசதிகளும் கொண்டஇடம் பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது மேற்கூறிய பாடசாலையின் அபிவிருத்திச்சங்கத்தின் பொதுச்செயலாளராகப் பணியாற்றுகிறர்.

2000 இந்துக்களுக்கு அதிகமானேர் உறுப்பினராகக் கொண்ட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் நிருவாக செயலாளராக இவர் பணியாற்றி வருகிறர்.

இவர் [illegible]வாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. க. இராமலிங்கம் மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா இராமலிங்கத்தினது மூன்ருவது புத்திரனுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் நெருக்கடியின் எதிரொலி: ரஷ்ய - பிரிட்டன் ஒப்பந்தம் இடைநிறுத்தம்!

## வெளியுறவு அமைச்சர் ஹரிங்டன் பாராளுமன்றத்தில் அறிவிப்பு

லண்டன், ஜன. 25

ஆப்கானிஸ்தானில் சோவியத்யூனியனின் தலையீட்டை வன்மையாகக் கண்டித்துள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் சோவியத்யூனியனுடனான இருதரப்பு ஒப்பந்த நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்ட வெளியுறவு அமைச்சர் திரு. ஹரிங்டன் பிரிட்டனின் நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறினார்.

சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்குமிடையிலான அமைச்சர் மட்டத்தொடர்புகள் உடனடியாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள திரு. ஹரிங்டன், பல வருடங்களுக்கு முன்னர்சோவியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் உடனடியாக நிறுத்தப்படும் என்றார்.

நூறுகோடி டாலர் பெறுமதியான அணுஆயுத பரிமாற்ற ஒப்பந்தமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (கு)

## இடமாற்றம்

(புளியங்குளம்)

நெடுங்கேணி தபாற்கந்தோரில் உதவி தபாலதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். மகாலிங்கம் தெல்லிப்பழை தபாற் கந்தோருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (கு)

## இந்தியப் பிரதிநிதி பாக். விஜயம்

புதுடில்லி, ஜன. 25

ஆப்கான் நெருக்கடி குறித்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ஆர். வி. சாத்தே அடுத்தமாதம் 4-ம் திகதி இஸ்லாமாபாத் செல்கிறார். [கு]

## 'ஆப்கான் பிரச்னைகளை தீர்க்க வெளியார் தேவையில்லை'

### இந்திய வெளியுறவு அமைச்சர்கருத்து

புதுடில்லி, ஜன. 25

ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளை வெளிநாட்டாரின் தலையீடு இன்றியே தீர்த்துவைக்கலாமென்று இந்தியவெளியுறவு அமைச்சர் திரு, நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய லோகசபையில்மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்த திரு. நரசிம்மராவ், ஆப்கானிஸ்தானின் புதிய ஜனாதிபதி திரு.கார்மலுக்கு இந்திய அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் கூறினார்.

ஆப்கான் நெருக்கடி குறித்து இந்தியாவின் நிலைமைபற்றியே அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வெளியுறவு அமைச்சர் அக்கடிதம் பற்றிய விபரம் எதனையும் வெளியிடவில்லை.

ஆப்கானிஸ்தான் புதிய அரசாங்கத்தை இந்தியா உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவில்லையென்றுதெரிவித்த திரு. நரசிம்மராவ் கடிதம்அனுப்பியதன் மூலம் அதனை அங்கீகரித்ததாகவே கருத்தில் கொள்ள முடியும் என்று கூறினார். (கு)

# 'தமிழக அ.தி.மு.க. அரசு தொடர்ந்து நீடித்திருக்கும்

### உறுதியாகவும் இருக்கிறது' என்கிறார் எம். ஜி. ஆர்.

சென்னை, ஜன, 25

''தமிழக சட்டசபையின் பதவிக்காலம்வரை தற்போதய அ. தி மு. க. அரசு நீடித்திருக்கும்'' என்று முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில்மேற்கண்டவாறு கூறிய திரு. இராமச்சந்திரன் தமிழக அரசு உறுதியாகவே இருப்பதாகக் கூறினார்.

லோகசபை இடைக்காலத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. க. வின்தோல்வியைக்கருத்தில் கொண்டு அரசாங்கம் ராஜினாமாச் செய்யவேண்டிய அவசியம் ஏதும் இல்லையென்றும் திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார். (கு)

## ஈரான் எல்லையில் ரஷ்ய துருப்புக்கள் குவிப்பு?

### செய்தி தவறானது என்கிறது சோவியத்

மாஸ்கோ, ஜன. 25

ஆப்கான்-ஈரான் எல்லையில் சோவியத்துருப்புகள் குவிக்கப்படுவதாக அமெரிக்க பாதுகாப்புக் காரியதரிசி வாஷிங்டனில் கூறியிருப்பது உண்மைக்கு மாறானதென்று இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது,

ஈரான்,பாகிஸ்தான்ஊடாக இந்துமகா சமுத்திரத்துக்குள் பிரவேசிக்க சோவியத்யூனியன் வழிதேடுகிறது என்ற யு. பி. ஐ. செய்தியின் ரகத்தைச் சேர்ந்ததே இந்தக்கட்டுக்கதையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதுபற்றி ஈரான் தரப்பில் தெஹ்ரான், எல்லை நகரங்களிலிருந்து ஈரான் ராணுவம் வெளியிட்ட உண்மை விபரங்களை வாஷிங்டன் கணக்கிலெடுக்காதது விளங்கிக்கொள்ள முடியாததாகும். வாஷிங்டன் கூறுவதுபோல்ஆப்கான்ஈரான் எல்லையில் சோவியத்துருப்புகள் இல்லை. ''ஈரான் எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றும் திட்டமும்'' இல்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது, அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''காபுல் அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஆப்கானிஸ்தான் சென்றுள்ள சோவியத் துருப்புகள் வெளியார் தாக்குதல்களை ஆப்கன் படைகள் சமாளிக்க ஒத்தாசை வழங்குவதே அத்துருப்புகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ள கடமையாகும்.

''ஈரானுக்கெதிரான சோவியத் திட்டம்பற்றி பிரச்சாரம் செய்யப்படுவது ஈரான் கரைக்கு 24 போர்க் கப்பல்களை அமெரிக்காஏவிவிட்டிருப்பதை மூடிமறைக்கவே, ஈரானை பயமுறுத்தும்போர்க் கப்பல்களில் 250 விமானங்கள் உள்ளன. பிரதி விமானமும் 7-8தொன் குண்டுகளை எடுத்துச்செல்லும் ஆற்றலுடையது. 1000கிலோ மீட்டர் தூரம் செல்லக்கூடியது. இவற்றில் அணுகுண்டுகளையும் பொருத்தலாம், எந்த நிமிடத்திலும் ஈரானை தாக்கக்கூடிய தயார் நிலையில் அமெரிக்க கடற்படை உள்ளது.

''அமெரிக்க அச்சுறுத்தலிலிருந்து உலகின் கவனத்தை திசை திருப்புவதே இப்பிரசாரத்தின் நோக்கமாகும்''என்று தெரிவித்துள்ளது. (டி)

## மாஸ்கோ ஒலிம்பிக்: கமிட்டி உறுப்பினர் ஆதரவு!

(மாஸ்கோ)

மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஆதரவு பெரியளவில் அதிகரித்துள்ளது. சமாதானம் அமைதியினதும் எதிரிகள் எழுப்பிய தடைகளையெல்லாம் இந்தஆதரவுகள் உடைத்தெறிந்துவிட்டன. பிற்போக்குச் சக்திகளது முயற்சிகளயாயும் பயனற்றுப்போய் விட்டன. சோவியத்துக்களது பூமியில் நடைபெறும் இந்த மாபெரும் விளையாட்டு விழாவை நட்புறவுகளினதும் ஐக்கியத்தினதும் விழாவை நோக்கி உலக இளைஞர்கள் வருவதை எவராலும் தடை செய்யவியலாது'' இவ்வாறு 'சோவெட்ஸ்கி ஸ்போர்ட்' என்ற பத்திரிகை எழுதியுள்ளது.

மேற்கு ஜெர்மனியின்தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவரான வில்லிடாவும், சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி உறுப்பினரும் பிரபல மேற்கு ஜெர்மன் தொழிலதிபருமான பெர்டோல்ட் பெய்ஸ், பெல்ஜியம் ஒலிம்பிக்கமிட்டியின் செயலாளர் அண்டியன் வாங் டெங் என்டே ஆகியோர் மாஸ்கோ ஒலிம்பிக் விளையாட்டுக்களில் தலையிட எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் நிராகரித்துள்ளனர். பெல்ஜிய அரசாங்கம் என்ன முடிவெடுத்தாலும், அதையும் மீறி பெல்ஜிய விளையாட்டு வீரர்கள் மாஸ்கோ செல்வரென்று அண்டியன் வான் டெங் என்டே, தெரிவித்தார், இத்தாலியின்தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் பிரான்ஸ் காராரோ, அமெரிக்க நிர்வாகமும் மேற்கை


(7-ம்பக்கம் பார்க்க)

## அஸாமில் பூரண அமைதி

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் கடந்த முப்பது நாட்களாக நிலவி வந்த பதட்டநிலை அமைதியடைந்துள்ளது.

அங்கு நிலைமைகளை நேரில் சென்று அறிந்த ஜனதா தலைவர்களான திரு. வாஜ்பாய், திரு. ரவீந்திரவர்மா ஆகியோர் இத்தகவலை வெளியிட்டுள்ளனர். (கு)

'அம்புஷ்'
கம்பளப் புழுக்கள்
உங்கள் பயிர்களை அழிக்க முன்பு
அவற்றை அழிக்கிறது.

உங்கள் மிளகாய், வெங்காயப் பயிர்களைப் பாதிக்கும் பொருட்டுச் சந்துக் குத்தி, இலைபுன்னும் சகம்பளப் புழுக்கள், அனைத்தையும் உடனே அழிக்க, விரைந்து செயலாற்றும் அம்புஷ் தெளியுங்கள். அம்புஷ் நெடுங்காலம் வலிமையுடன் நிலைத்து நிற்பதால், அடிக்கடி மீண்டும் மருந்து தெளிக்கும் தேவையை அது தவிர்க்கிறது. உங்கள் மிளகாய்

வெங்காயப் பயிர்களைப் பொருட்டுச் சந்துக் குத்தி, மற்றும் இருமிப் பீடைகளிலிருந்து பாதுகாக்க அம்புஷ் பாவியுங்கள்.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு
தொலைபேசி: 28421

TAL 5146


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
முத்துச்சிப்பி

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
தனிப்பிறவி
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
Zoltan Hound of Dracula

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
கற்புக்கரசி

ஸ்ரீதர் (யாழ். நகர்) கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி,
சுஜாதா,
விஜயகுமார்
தீபம்
Coming Soon - AIR PORT
FRAMED

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
தாயில்லா குழந்தை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
6-வது ஆனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

சாந்தி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7612
மக்கள் கலைஞரின்
புரட்சி சாதனை 100
குதூகலமிக்க நூறுவது நிறைவு தினம்
கடைசி வாரம் டாக்ஸி டிரைவர்
...வர்ணத் திரைஓவியம்...
28-1-80 THE TAKING OF PELHAM-1-2-3

3rd & FINAL WEEK
REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN, YORK SUSANNAH
SKY RIDERS
Next: ONE FLEW OVER THE CUCKOO'S NEST

வெற்றிகரமான 3-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

# இன்றைய பலன்

தை மாதம் 12-ம் திகதி
சனிக்கிழமை
(26-1-1980)

மேடம்: விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவே இருக்கும், தொழில்புரியுமிடத்தில் மந்தநிலை தென்படும், சிக்கல் நிறைந்த தினம்.

இடபம்: அரசியல்வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம், குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் புதிர்போடும், நடுநிலைமை நன்று.

மிதுனம்? சிலர் வாழ்க்கையில் தனச் சிறப்பும் இடம்பெறலாம், புதிய முதலீடுகள் செய்வதற்கு இன்று நலம், முன்னேற்ற வழியும் திறக்கும்.

கடகம்: திடீர் முடிவின் மூலம் நன்மையான விடயமொன்றை நழுவ விடுவீர்கள், சிந்தையிலும் குழப்பநிலை உருவாகும், எதிலும் மனத்திடம் நன்று.

சிங்கம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர். களிப்பூட்டும் விருந்தொன்றும் கிடைக்கலாம், இயந்திர வளர்ச்சிக்குமிடமுண்டு.

கன்னி: இதயத்தின் ஏக்கம் தணியும், செல்வாக்குப் பெருகும், புத்திர சுகமுமுண்டு, புண்ணிய விருப்புமுண்டு, பொன்னாள்.

துலாம்: எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்குமிடமுண்டு, புனைந்துரைகளால் மனது புண்படும், தொழிலிலும் கவனம் வேண்டும்.

விருச்சிகம்: களஸ்திரவழியாலும் சண்ணியம் சேரும், வெற்றிக்கு வழியுண்டு, செலவுகளுக்குமிடமேற்படலாம், குடும்பத்திலும் அமைதி நிலவும்.

தனுசு: புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும், தொழிலும் நஷ்டம் பெறும், விபத்துகளும் இடம் பெறலாம், அவதானம் விரும்பத்தக்கது.

மகரம்: அன்புக் கரங்கள் அணைக்கும், அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம், தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், கடமையும் சிறக்கும்.

கும்பம்: உத்தியோக விருப்பு மேலிடும், உயர்பீட ஆதரவும் உண்டு, மகிழ்ச்சி தரும் விடயத்திற்கும்இடமுண்டாம்.

மீனம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு, பொதுமக்கள் ஆதரவும் உண்டு, வணிகர்களாயின் ஆதாயத்திற்கிடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## மாஸ்கோ...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ரோப்பாவின் பிற்போக்குத் தலைவர்களும் ஒலிம்பிக்ஸ்-80ல் பங்குபற்றுதிருக்க எடுக்கும் ஆத்திரமூட்டும் திட்டங்களை வன்மையாகக் கண்டித்துள்ளார், பிரிட்டிஷ் விளையாட்டு வீரர்கள் இத் திட்டங்களை எதிர்க்கிறார்கள் என பிரிட்டிஷ் ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் டெய்னிஸ் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் வீரர்கள் இத்திட்டத்தில் பங்கு பற்றுவதில் அரசாங்கம் எடுக்கும் எத்தலையீட்டையும் நமது சங்கம் எதிர்க்கும் என்று அவர் கூறியுள்ளார். (கு)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி விஜயகுமாரி
சாந்தி

## மீனவரைக் காணவில்லை

(மன்னார்)

பேசாலை துறைப்பாட்டைச் சேர்ந்த மீனவர் ஒருவர் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று பல நாட்களாகியும் திரும்பவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. கடலில் தீவிர தேடுதல் நடத்தியும் மேற்படி நபரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மன்னார் பொலிசாரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

......

## மகாஜனவுடன் திருமலை சென்.ஜோசப் மோதுகிறது

[திருகோணமலை]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கோஷ்டி கொக்குவில் இந்துக்கல்லூரியுடன் நடைபெற்ற போட்டியில் 3-2 கோல்களாலும் மட்டக்களப்பு சென். மைக்கேல் கல்லூரியுடன் நடைபெற்ற போட்டியில் 2-1 கோல்களாலும் வெற்றியீட்டியுள்ளது. இப்போட்டிகள் முறையே கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றன.

கடந்தவருடம் நடைபெற்ற 'சிங்கர்' வெற்றிக் கேடயத்திற்கான போட்டியில் (சாம்பியன் போட்டியில்) மகாஜனக்கல்லூரி வாகை சூடியமை தெரிந்ததே. [நா]

## முத்துமாரிக்கு சித்திரத்தேர்

(மாவிட்டபுரம்)

கீரிமலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சித்திரத்தேர் ஒன்று இல்லாத பெருங்குறையைப் போக்க தேர்த் திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கு)

## பொதுத் தொழிலாளர் யூனியன் வெற்றி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர் மன்றத் தேர்தலில் சிமெந்துத் பொதுப் தொழிலாளர் யூனியன் குழு மிக அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளது.

தேர்தல் ஆணையாளர் திரு. கே. சி. டி. சில்வா, உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. சி. ஈ. குணரத்தினம் ஆகியோர் இத் தேர்தலை நடத்தினர். (கு)

......

## இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

பண்டாரவளை தபாற்கந்தோரில் மேற்பார்வையாளராக கடமையாற்றிய திரு. அருளம்பலம் சத்தியானந்தன் காங்கேசன்துறை தபாலதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். காங்கேசன்துறை தபாலதிபர் திரு. இரத்தினம் மகேசன் நிக்கவெரெட்டியாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். (கு)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: ஈடு / 11990

கனகநாயகம் மகேஸ்வரன்,
1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். - வழக்காளி-
எதிராக
வையாபுரி இராஜேஸ்வரன்,
இலட்சுமி வளவு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் MB11990-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளும் 1980-ம் வருஷம் மாசி மாதம் (12-2-1980) 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 7490/-ம் 1970-9-13 தொடக்கம் 1971-7-2 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 493/40. (இதில் இவ் வழக்கின் கணக்கால் இத்திகதிவரை ரூபா 6500 - ஓர்பகுதியாகக் கொடுக்கப்பட்டபடியாலும்)

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்கோவிற்பற்று சண்டிருப்பாய் இறை 'கட்டுடைவளவு' பரப்பு நி. இலா. 3குளி1-ம் (நி. ப. 3குளி 1)வீடும் கிணறும்வான்பயிர், செய்பயிர்களும் இதற்குஎல்லைகிழக்கு: மானிப்பாய் ஊரெல்லை ஒழுங்கை வடக்கு வாய்க்கால் மேற்கு: வைத்திலிங்கம் இராசரத்தினத்திற்குரிய ஆதனம். தெற்கு: சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கும்பங்காளருக்குமுரியஆதனம். இதில் குத்த கிணற்றில் தெற்குப் புறமாகவுள்ள 6 அடி அகலமுள்ள வடக்கெல்லை காணிக்குரிய வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக மிகுதியடங்கலிற் சொரியலாக அரைவாசி. இக்காணி E 225/122ல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை 'கட்டுடைவளவு' பரப்பு நில. இலா. 17¼ வீடும் கிணறும் வான்பயிர், செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு: நாகலிங்கம் பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனமும், வாய்க்காலும் வடக்கு: வாய்க்கால் மேற்கு: மானிப்பாய் எல்லை ஒழுங்கையும் சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனமும். தெற்கு சபாபதிப்பிள்ளை அம்பலவாணருக்கும், சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கும், பொன்னம்பலம் சின்னத்துரைக்குமுரிய ஆதனங்கள். இதில் சொரியலாக பரப்பு நில. இலா 3½ அரைச் சேர்ந்தவைகளும். இக்காணி E 225/214ல் பதியப்பட்டது.

3. மேற்படி சண்டிருப்பாய் இறை "வண்ணான் துறை" பர நெல் இலா 12 E 96/14-ல் பதியப்பட்டது. பரப்பு நெ. இலா. 9 1/8 E 96/15ல் பதியப்பட்டது. ஆக பரப்பு நெல் இலா. 21 1/8 இதற்கு எல்லை கிழக்கு தில்லையம்பலம் பேரம்பலத்தின் உரித்தாளருக்கும் மயில்வாகனம் இரத்தினசிங்கத்துக்குமுரிய ஆதனம். வடக்கு கார்த்திகேசு நாகலிங்கத்திற்கும் இராமலிங்கம் பொன்னம்பலத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு: அவரவர் இராமலிங்கத்தின் உரித்தாளருக்கும் வீரகத்தி தம்பிப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். தெற்கு: நமசிவாயம் இராசசிங்கத்துக்கு உரிய ஆதனம் இதடங்கலும் இக்காணி E 225/215ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்.
19-12-79


4786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**

SPECIALIST IN WATCHREPARING

யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...




**டில்கா வாச்வேக்ஸ்**

பஸ் நிலைய எதிர் மேல்மாடி.

40/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# ஈழநாடு The EELANAADU

50 சதம்


## இந்திய காப்டன் விஸ்வநாத்

(புதுடில்லி)

இம்மாதம் 29ம் திகதி கல்கத்தாவில் நடைபெறும் ஆறுவதும் இறுதியுமான இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட்டெஸ்டில். இந்தியகிரிக்கெட் கோஷ்டிக்கு, திரு. குண்டப்பா விஸ்வநாத் தலைமைவகிப்பார்.

இந்தியகிரிக்கட்கோஷ்டியின் தலைவர் திரு. சுனில்கவாஸ்கர் ராஜினமாச்செய்துகொண்டதைத் தொடர்ந்து, கவாஸ்கரின் மைத்துனரான விஸ்வநாத் 6வதுடெஸ்டுக்கு தலைமை தாங்குகிருர்.





றிக்கோவுக்கு வேறு கிளை இல்லை


# இலங்கை கடற்படையினர் இந்தியமீனவரிடம் கப்பம்பெறுவதால் எமது மீனவரை அவர்கள் தாக்குகின்றனராம்

## 'அமிர்' சபையில் புகார் குறித்து தகவல்

(கொழும்பு)

"ஆழ்கடலில் ரோந்துசுற்றி வரும் இலங்கைக் கடற்படையினர் இந்தியாவிலிருந்து மீன்பிடிக்க வரும் மீனவர்களினல் பிடிக்கப்படும் ருல், நண்டு போன்றவற்றை அவர்களிடமிருந்து கப்பமாகப் பெற்றுவருகிருர்கள் எனவே தான் அதற்குப் பதிலாக நாம் உங்களை இம்சைப்படுத்துகிருேம். நாம்தான் உங்களைத் தாக்கியதாக உங்களது கடற்படை வீரர்களிடம் தெரிவியுங்கள்" இவ்வாறு கூறும் இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கச்சதீவுக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் வடபகுதி மீனவர்களைத் தாக்குகிருர்கள் என எனக்கு எமது மீனவர்கள் புகார்செய்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

நமதுநாட்டுக் கடல்எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீன்பிடி இழுவைப் படகில் வரும் இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் தங்கியிருந்து மீன்பிடிக்கும் இலங்கைமீனவர்களைத் தாக்கிவருகிருர்களாம்.

கடந்த 20ம் திகதி நெடுந்தீவிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஜேசுதாஸ், தேவானந்தம் ஆகிய இருவரையும் இன்னும் காணவில்லை என்றும் அவர்கள் தாக்குதலினல்மரணமடைந்திருக்கலாம் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது வேறு சில மீனவர்களைத் தாக்கிய இந்திய மீனவர்கள் அவர்களைக் கச்சதீவில் கொண்டு போய் விட்டுவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

எனவே இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த கடற்றெழில் அமைச்சர் திரு, பெஸ்டஸ் பெரேரா இந்திய மீனவரின் அத்துமீறல் இப்போது அதிகரித்துவருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் இதுகுறித்து வெளிநாட்டு அமைச்சுடன் ஆலோசனைநடத்தியபின்னர் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் கூறினர்.

(ம-இ)

......

## கூட்டத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றிய முடிவு வந்துள்ளதாகவும், இதனை மக்கள் அறியவேண்டும் என்றும்உறுப்பினர் திரு.செல்வநாயகம் கூறி பத்திரிகையை வாசிப்பதில் தவறில்லையென்றார்.

இதனை மக்கள் தெரியவேண்டுமென விரும்புகிறீர்களா? அப்படியானல் சரி என்று நகரமுதல்வர் கூறியதைத் தொடர்ந்து திரு. என். ரி. செல்லத்துரை அச்செய்தியை வாசித்தார்.

(க-இ)

## நூல் வெளியீட்டு விழா

(மட்டக்களப்பு)

மலையக எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப்பின் "நாமிருக்கும் நாடே" நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு பொதுநூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு திருக்குறள் முன்னணிக்கழகத் தலைவர் திரு. சி. ஆலாலசுந்தரம் தலைமை வகிப்பார். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். நித்தியானந்தன் நிகழ்த்துவார். (செ)

## நிறைவேறியது

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கான செலவுப்படி வழங்கும் பிரமாணங்கள் அடங்கிய சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது,

மாநகரசபை மேயர், உறுப்பினர்கள் நகரசபைகளின் முதல்வர்கள், உறுப்பினர்கள், ஆகியோருக்கான செலவுப்படிகளை வழங்குவதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்படுவதாக பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தார்! (கு)

## மறைந்த ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தேவானந்தம் அல்லது சின்னக்குட்டி (25 வயது) செ. யேசுதாஸ் அல்லது சாணக்குட்டி ஆகியோர் இன்றுவரை திரும்பவில்லை. மயிலிட்டியைச் சேர்ந்த மேற்படி நபர்களைத் தேடும் வேட்டையில் உறவினர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரிலுள்ள சுழிஓடிகளை அழைத்துவந்து ஆழ்கடலில் தேடியபோதே படகு கண்டுபிடிக்கப்பட்டது.

காணமல்போன இலங்கை மீனவர்களை வேற்று நாட்டு மீனவர்கள் கொலைசெய்து விட்டு வலைகளைக் கொள்ளையடித்ததுடன் படகையும் எரித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (கொ-இ)

## "மக்களுக்கு நன்மைதரும் திட்டங்களை எதிர்ப்பது அறியாமை"

### கூட்டணிபாராளுமன்றக்குழு அறிக்கை

(கொழும்பு)

"பாராளுமன்றத்தில்எதிர்க்கட்சி என்ற முறையில் எதிர்க்கவேண்டியதை எதிர்க்க. எந்தச்சந்தர்ப்பத்திலும் நாம் தவறியதில்லை. அதேநேரத்தில் எதிர்க்கட்சி என்ற காரணத்தினுல் மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களை எதிர்க்க வேண்டும் என்று கருதுவது அறியாமையாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது, பாராளுமன்றக் குழுவின் சார்பில் கூட்டணியின் செயலாளர் நாயகம் விடுத்துள்ளஇந்த அறிக்கை மேலும் கூறுவதாவது;

"சிலவாரங்களாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் பேசியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மக்கள் மத்தியில் சில தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருப்பதால் சரியான நிலையை விளக்கும்பொருட்டுப் பாராளுமன்றக் குழு சார்பில் இந்த அறிக்கை விடப்படுகின்றது.

"வரவுசெலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தின்போதும், அமைச்சர்களோடு தொடர்புடைய ... களிலும் தனிப்பட்ட அமைச்சர்கள் ஜனநாயகரீதியாக இயங்கியிருந்தால், நல்லகாரியம் எதையாவது செய்திருந்தால் அதற்குப் பாராட்டுத் தெரிவிப்பது சம்பிரதாயம், அதனுல் கட்சியின் கொள்கையிலோ, நிலையிலோ எவ்வித மாற்றமுமேற்பட்டிருப்பதாகக் கருதமுடியாது. சில சந்தர்ப்பங்களில் ஒரு அமைச்சரை எமது பிரதேசத்தில் அத்தியாவசியமான ஒரு அபிவிருத்தித் திட்டத்தை நடாத்தும்படி கோரும்போது அவருக்கு ஆற்றலுண்டு, அமைச்சரவையில் செல்வாக்குண்டு, எனவே அவர் அதைச் செய்துமுடிக்கக் கூடியவர் என்று பேசினுலும் சில செய்திகளில் அப்பேச்சின் முற்பகுதியையும் பிற்பகுதியையும் விட்டு அமைச்சரின் ஆற்றலையும், செல்வாக்கினையும் பாராட்டியதாகப் பிரசுரிக்கப்படுவதுண்டு,

"அரச உடமையான இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனச் செய்தி மடலிலும் இப்படிக் கூறப்படுவது வழக்கம்; இவற்றின் உண்மையை மக்கள் புரிந்து வீண் தப்பபிப்பிராயங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். தமிழர் விடுதலைக்கூட்டணியோ அதன் பாராளுமன்றக் குழுவோ தமிழ்மக்கள் முன் சென்ற தேர்தலில் சமர்ப்பித்த திட்டத்தை விட்டு வழுவியதில்லை. வழுவமாட்டா தென்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகின்ருேம்"

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியென்ற முறையில் நாம் எதிர்க்கவேண்டியவற்றை எதிர்க்க எந்தச்சந்தர்ப்பத்திலும் தவறியதில்லை. அதேநேரத்தில் எதிர்க்கட்சியென்ற காரணத்தினுல் மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களையும் எதிர்க்க வேண்டுமென்று கருதுவது அறியாமை.

"இலவச பாடப்புத்தக விநியோகம், வீடு கையளிப்புத் திட்டம் ஆகியவற்றை இக்கண்ணேட்டத்தில் நாம் வரவேற்ருேம். மக்களின் உரிமைகளைப் பறிக்கும் திட்டங்களைக் கடுமையாக எதிர்ப்போம். இதுவே எதிர்க்கட்சியின் கடமை. அதேநேரத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமாக எமது தமிழ் ஈழ இலட்சியத்தைப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும், நாட்டிற்கு உள்ளும்வெளியும் உலகறியப்பிரகடனப்படுத்திவருகிருேம். எனவே வீண் மனக்குழப்பங்களுக்கு இடமளிக்காது இலட்சியப்பாதையில் கட்டுப்பாட்டுடன் இயங்குமாறு தமிழ்மக்களை வேண்டுகிருேம்."


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சோமசுந்தரம்

நல்லூர் எஸ். எஸ். சோமசுந்தரத்தின் (R, M. P. இரணை இலுப்பைக்குளம்) அன்பு மனைவியும், சியாமளா, முரளீதரன் (St. Johns Academy) ஆகியோரின் தாயாருமான பத்மாவதி இறைவன் திருவடிகளை யடைந்தார். இவர் இளைப்பாறிய கல்வி அதிகாரி (மலேசியா) எஸ். செல்வநாயகத்தின் மூத்த மகளும், புஷ்பா செல்வநாயகம் (யாழ். இந்துமகளிர் கல்லூரி), டாக்டர் எஸ். செல்வேந்திரா (அவுஸ்திரேலியா) எஸ். ஹரிச்சந்திரன் (கணக்காளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியுமாவார். ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: எஸ். செல்வநாயகம்
151, கோவில் வீதி,
நல்லூர்.

4809

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ஆறுமுகம்

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பன்னலை வாசியுமான இளைப்பாறிய அதிபர் சுப்பிரமணியம் ஆறுமுகம் காலமானர். இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், சுபாஸ் சந்திரன் (Turquand youngs & Co) கலாரஞ்சனி (பல்வைத்திய நிபுணர்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவராஜா (பொறியியலாளர் நைஜீரியா)வின் மாமனரும், காயத்திரியின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று(26-1-80) மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை-பன்னலையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கீரிமலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்; 4808



இப்பத்திரிகை ஈழநாடு ... ஜனவரி மாதம் 26-ந் திகதி அ... பனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ...

Registered as a Newspa... ...ce Sri Lanka under No. GB/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org